1973 டிசம்பர் 1]

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சிதம்பரத்திலே நடராஜர் கோவிலில் ஏதோ இரகசியம் இருப்பதாகவும், சிதம்பர இரகசியம், சிதம்பர இரகசியம் என்றும் சொல்கிறார்கள். அதைப்பார்க்க 1¼ ரூபாய் கொடுத்தால் அனுமதிக்கப்படுவதாகச் சொல்லப் படுகிறது. அதை அறிந்துகொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு இல்லை. அமைச்சரவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படியானால் அந்த இரகசியத்தை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இரகசிய மாக இருக்கவேண்டிய செய்தியை சட்ட மன்றத்தில் சொல்ல முடியாது. திரு. வீராசாமி அவர்கள் விரும்பினால் சென்று பார்த்து வரலாம்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் பதவி

*539 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-74 கல்வி ஆண்டில் புதிதாக எத்தனை ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 1973-74-ல் மாநில அரசுத் திட்ட பணிகளில் 6–11 வயதுச் சிறார்களைக் கூடுதலாகச் சேர்க்க 600 கூடுதல் ஆசிரியர் பதவிகளும், 11–14 வயதுச் சிறார்களைக் கூடுதலாகச் சேர்க்க 500 கூடுதல் ஆசிரியர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை போக, இந்தியாவெங்கும் படித்து வேலை வாய்ப்பு இன்றியிருப்போருள் 5 லட்சம் பேருக்கு 1973-74-ல் வேலை வாய்ப்பளிப்பதற்கான சிறப்புத் திட்டத்தின் கீழ் நம் மாநிலத்தில் 10,200 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இதில் 6,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களும் 500 ஹையர் கிரேடு ஆசிரியர்களும் இடம் பெறுகிறார்கள்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த பள்ளி ஆசிரியர்களை நியமிக்கும்போது உள்ளாட்சித் துறையில்—ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் ஒரு 'அப்பாயின்ட் மென்ட் கமிட்டி' வைத்து, அதன் மூலமாக நியமிக்கிறார்கள். அதிலே பல மோசடிகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை

மனதில் வைத்துக்கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சி மன்றங்களிலும் ஆசிரியர்களை நியமிக்கும்போது அரசு தரப்பு மூலமாக—அரசு அதிகாரிகள் மூலமாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை. ஏற்கெனவே வகுக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையிலேதான் ஊராட்சிக் குழுவின் மூலம் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். அரசே அந்த நியமனத்தைச் செய்வதென்றால் புதிய கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

திரு எம். சுரேந்திரன் : சார், இந்த ஆசிரியர்களை நியமிப்பது ஒரு கொள்கைப் பிரச்சினையாக இருப்பதினால், அரசு அதில் தலையிட முடியாது என்ற வகையிலே அமைச்சருடைய பதில் அமைந்திருந்தது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆசிரியர்களை எடுக்கும்போது அவர்கள் எந்தெந்த வருஷத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் என்று பார்த்து, அந்த வரிசைப்படி நியமிக்கப்பட வேண்டுமென்றுவது அரசு உத்தரவு பிறப்பிக்குமா ? ஏனென்றால் நியாயமான முறையிலே முதலிலே தேர்ச்சிப் பெற்றவர்கள் நியமனத்தில் கடைசியாக வரக்கூடிய சூழ்நிலை இப்போது இருக்கிறது. அதை மாற்றி அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சி மன்றங்களிலும், அரசு சார்பிலும் நடைபெறும் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கும்போது, அவர்கள் தேர்ச்சி பெற்ற ஆண்டின் வரிசைப்படிதான் நியமிக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறோம். தனியார் பள்ளிகளிலும் அப்படிச் செய்யவேண்டுமென்று சொன்னபோது அவர்கள் வழக்கு மன்றத்திற்கு சென்று, அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றிருக்கிறார்கள். ஆகையால் தனியார் பள்ளிகளில் நாம் கட்டாயப்படுத்த முடியவில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ள பயிற்சி ஆசிரியர்களுக்கு (அப்பிரண்டிஸ் ஆசிரியர்கள்) பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறதா ? இப்போது

1973 டிசம்பர் 1]

அளிக்கப்பட்டுள்ளப் பதவிகளில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு எத்தனை, தனியார் துறை பள்ளிகளுக்கு எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏற்கெனவே தொழில் பழகு ஆசிரியர் என்ற முறையில் 5,746 பதவிகளை ஏற்படுத்தினோம். அவர்களில் 1,800 பேர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் முறையான பதவிகளில் ஏற்கெனவே அமர்த்தப்பட்டுவிட்டார்கள். நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் யாரும் விடுபடாமல் எல்லோரும் முறையானப் பதவிகளில் அமர்த்தப்படுவார்கள். இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள 10,200 பதவிகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு எத்தனை, அரசு சார்பு பள்ளிகளில் எத்தனை, தனியார் பள்ளிகளுக்கு எத்தனை என்பதை அந்தந்த மாவட்ட தலைமைப்பள்ளி அதிகாரி அவர்கள் இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து நியமனம் செய்து வருகிறார்கள்.

Pension for Tamil scholars

*540 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to provide pension to aged scholars in Vedic Sciences and Tamil Philosophy; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Thiru N. DENNIS: Sir, as their contribution is to the society may I know whether, to encourage them, special treatment will be shown to them by providing pension?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே வடமொழி வல்லுநர்களுக்கு மத்திய அரசு உதவித்தொகை அளித்து வருகிறது. மாநில அரசில் அப்படிப்பட்ட திட்டம் இல்லை. ஆனால் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து கலைஞர்களுக்கு உதவி அளிக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. வடமொழி வல்லுநர்கள் உதவித் தொகைப் பெறுவதற்கு, அவர்கள்